பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 07 2025 **THURSDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவின் ஜனநாயகம் நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் நிவாரணம் கோரி போராட்டம் நடத்திவரும் உயிரிழந்தோர் குடும்பத்தினர் மீது காவல்துறையினர் அடக்குமுறையை கையாளுவதை கண்டிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. சென்னை கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையத்தில் மலிவு விலை உணவகம் தொடங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு சேகர்பாபு கூறியுள்ளார்.

4. தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Reyes Varela** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

இந்திய நாட்டின் ஜனநாயகம் நம்பிக்கையின் ஒளிக் கீற்றாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசு முறைப்பயணமாக கானா சென்ற பிரதமர், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இன்று ஆற்றிய உரையில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் பயணம் உலகளாவிய வளர்ச்சியின் தூண்டுகோலாக அமைந்துள்ளது என்று கூறினார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயகமாக விளங்கும் இந்தியாவில், ஜனநாயக கட்டமைப்பு மிகவும் வலுவான நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவின் நாடாளுமன்றம் மிக வலிமையானது என்று குறிப்பிட்ட பிரதமர், நாடாளுமன்றத்திலும், மாநில சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு அளித்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் ஜனநாயகத்தின் முத்திரையாக உள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

அனைவரின் முயற்சியில், அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன் இந்திய ஜனநாயகம் முன்னேற்றப்பாதையில் பீடுநடை போடுகிறது என்று அவர் தெரிவித்தார்.

ஆப்பிரிக்காவின் வளர்ச்சிப்பாதையில் இந்தியா இணைந்து பயணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்த ஆப்பிரிக்காவின் நீடித்த எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தெற்கத்திய நாடுகளின் வளர்ச்சியில்தான் உலக பொருளாதாரத்தின் வளர்ச்சியும் உள்ளது என்று கூறிய பிரதமர், ஜி-20 உச்சிமாநாட்டை தலைமையேற்று நடத்திய இந்தியா, ஒரு பூமி, ஒரு குடும்பம் - ஒரு எதிர்காலம் என்ற தொலைநோக்குப் பார்வையை உலகிற்கு அளித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமூக, கலாச்சார மற்றும் மொழி ரீதியாக இந்திய மக்களை எவ்விதத்திலும் பிளவுபடுத்த முடியாது என்று கூறிய பிரதமர், ஒற்றுமையும், கண்ணியம் மிக்க வாழ்வும், சுதந்திர உணர்வும் இந்தியர்களின் மனதில் வேரூன்றி உள்ளதாகவும் தெரிவித்தார்.

தமது கானா பயணத்தை முடித்துக்கொண்டு திரு நரேந்திர மோடி, இன்று மாலை **Trinidad – Tobago** புறப்பட்டு சென்றார்.

<<<<<>>>>>

விருதுநகர் பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம் கோரி போராடியவர்கள் மீது காவல்துறையினர் கடுமையான அடக்குமுறையை மேற்கொண்டதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பட்டாசு ஆலைகளில் நடக்கும் விபத்துகளை தடுக்க மாநிலத்தில் ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

காவல்துறையினர் போராட்டம் நடத்தும் அப்பாவி பொதுமக்கள் மீது அடக்குமுறையை மேற்கொள்வதை மாநில அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்த பட்டாசு ஆலை வெடிவிபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் போராட்டம் நடத்தியபோது காவல்துறையினர் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டது கண்டிக்கத்தக்கது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியும் குற்றம் சாட்டியுள்ளார்.

பட்டாசு ஆலை பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நிர்வாகத்திறன் அரசிடம் இல்லை என்றும், பேராட்டம் நடத்தும் மக்களின் கோரிக்கையை கேட்கக்கூட மனமில்லாமல் அவர்களை அச்சுறுத்துவதை ஏற்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

வன்முறையை கட்டவிழ்த்துவிடுவது, சட்டத்தை மீறி செயல்படுவது போன்றவற்றை உடனடியாக மாநில அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் மலிவு விலை உணவகம் தொடங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையப் பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பேருந்து நிலையம் இந்தாண்டு இறுதிக்குள் பயன்பாட்டிற்கு வரும் என்றார்.

மாமல்லபுரத்தில் கட்டப்பட்டுவரும் பேருந்து நிலையம் வரும் ஜனவரி மாதத்தில் திறக்கப்படும் என்று கூறிய அவர், குத்தம்பாக்கம் உட்பட புதிதாக அமைக்கப்படும் பேருந்து நிலையங்களில் மலிவு விலை உணவகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சென்னை கிளாம்பாக்கத்தில் சுயஉதவிக்குழுவினர் மூலம், மலிவு விலை உணவகம் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் திரு சேகர்பாபு கூறினார்.

<<<<<>>>>>

மத்திய அரசின் மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரும் 7-ஆம் தேதிமுதல் மூன்று நாட்களுக்கு நடமாடும் பாஸ்போர்ட் சேவை முகாம் நடைபெறவுள்ளது.

சென்னையில் இன்று எமது செய்தியாளரிடம் பேசிய மண்டல பாஸ்போர்ட் அதிகாரி திரு விஜயகுமார், இம்மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் இந்த முகாமை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

***(Voice Byte - பாஸ்போர்ட் அதிகாரி – 47 Sec.)***

<<<<<>>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு தினங்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

***(Voice Byte - ' செந்தாமரை கண்ணன் - 23 'Sec.)***

<<<<<>>>>>

சென்னை விமான நிலையத்தில் கடந்த மூன்று நாட்களில் சுங்கத்துறையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 65 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகை தகவல் அலுவலக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதேபோல், தாய்லாந்தில் இருந்து கடத்தி வரப்பட்ட இரண்டு அரியவகை குரங்குகள் பறிமுதல் செய்யப்பட்டு மீண்டும் தாய்லாந்துக்கே திருப்பி அனுப்பப்பட்டதாக அந்த செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பயனடைய விரும்பும் நெல் விவசாயிகள் இம்மாதம் 31-ஆம்தேதிக்குள் பிரிமியம் தொகையை செலுத்துமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் உடற்கல்வித்துறை ஆலோசனைக்கூட்டம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி மகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

--------------------

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் 70 வயதுக்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் பணி இன்று தொடங்கியது.

------------------

நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்கா அருகே உள்ள குடியிருப்புப்பகுதியில் சிறுத்தை நடமாட்டம் காணப்படுவதால், இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

---------------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் சட்ட விரோதமாக தங்கியிருந்த பங்களாதேஷை சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

-------------

சென்னை எழும்பூரில் நகை வியாபாரியை கடத்தி, பணம் மற்றும் தங்க நகைகளை பறித்துச் சென்ற வழக்கில், ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

---------------------

சென்னை தெற்கு கோட்ட அஞ்சல் ஊழியர்களுக்கான குறைதீர்ப்பு முகாம் வரும் 9-ஆம் தேதி காலை 11 மணிக்கு தியாகராயா நகர் முதுநிலை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

--------------

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே உள்ள நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழாவையொட்டி, வரும் 5-ஆம் தேதி முதல், 8-ஆம் தேதிவரை சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

-------------

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் மாணவர்கள் பங்கேற்றனர்.

-------------

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் சார்பில், சென்னையில் வரும் 8-ஆம் தேதிமுதல், அடுத்த மாதம் 28-ஆம் தேதிவரை கடனுதவி முகாம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜெகடே தெரிவித்துள்ளார்.

---------------

முன்னாள் படை வீரர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் தாம்பரத்தில் உள்ள இந்திய விமானப்படை நிலையத்தில் நாளை நடைபெறவுள்ளது.

-----------------

தரமணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்கில் குற்றவாளிக்கு 20 ஆண்டுகள் தண்டனை விதித்து செங்கல்பட்டு சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Reyes Varela** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-4 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் அலெக்சாண்டர் - **Learner Tien** இணையை வென்றது.

-----------

பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 6 விக்கெட் இழப்பிற்கு 432 ரன் எடுத்துள்ளது.

<<<<<END>>>>>